பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
08 11 2024 **FRIDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. ஊழலை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்ற மத்திய அரசின் கொள்கையில் தமக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. வேளாண் வளர்ச்சிக்காகவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பல திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 246 உதவிப் பொறியாளர்களுக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார்.

4. ஆவின் பால் விலையை உயர்த்துவதற்கான திட்டம் எதுவுமில்லை என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

5. ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் Anahat Singh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

ஊழலை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்ற மத்திய அரசின் கொள்கையில் தமக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சியில் பேசிய அவர், ஊழலை வேரோடு அகற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டோடு பல நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

அரசு நலத்திட்ட பயனாளிகளுக்கான தொகையை நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்துவது, மின்னணு சந்தை, பொருளாதார குற்றங்கள் தடுப்புச் சட்டம் போன்ற நடவடிக்கைகள் மூலம் ஊழல் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஊழலில் ஈடுபடுவோர் மீது சட்டரீதியான கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

>>>>><<<<<

வேளாண் வளர்ச்சிக்காகவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை

மத்திய அரசு செயல்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிப்பரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம், காமாட்சிபுரம் வேளாண் அறிவியில் மையத்தில் மகளிர் - விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கான தொழில்நுட்பக் கருத்தரங்கில் உரையாற்றிய அவர், 2047ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் விரைவாக நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

விவசாயிகளின் வருவாயை பெருக்கும் நோக்கில் ஆண்டுக்கு ஆறாயிரம் ரூபாய் பிரதமரின் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அரசின் மானியங்கள் நேரடியாக பயனாளிகளுக்கு கிடைக்கும் வகையில் பிரதமரின் ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ், வைப்புத்தொகை ஏதுமின்றி வங்கிக் கணக்குகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. எல். முருகன் கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 49 செகண்ட்ஸ்)

முன்னதாக, காமாட்சிபுரம் வேளாண் அறிவியல் நிலையத்தில் மாவட்ட அளவிலான வளர் மைய கட்டிடத்தையும் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் திறந்து வைத்தார்.

>>>>><<<<<

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவுசெய்யப்பட்ட 246 உதவிப் பொறியாளர்களுக்கான பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இதன் அடையாளமாக 20 உதவிப்பொறியாளர்களுக்கு பணி ஆணைகளை அவர் வழங்கினார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு வாயிலாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சிறு துறைமுகங்கள் துறை, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை ஆகியவற்றில் பணியாற்றுவதற்காக இந்த உதவிப் பொறியாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

ஆவின் பால் விலையை உயர்த்துவதற்கான திட்டம் ஏதுமில்லை என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் கால்நடை தீவன தொழிற்சாலையை ஆய்வு செய்த அவர், பால் கொள்முதல் விலையை விவசாயிகளுக்கு விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்..

தனியார் நிறுவனங்களின் பால் விலை, ஆவின் பால் விலையைவிட லிட்டருக்கு 12 ரூபாய் கூடுதலாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தீபாவளி பண்டிகையின் போது, ஆவின் இனிப்புகள் 20 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனையாகியுள்ளதாகவும் திரு. ராஜகண்ணப்பன் கூறினார்.

ந்திய அளவில் இரண்டாவது இடத்திற்கான விருதை பெற்றுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, இன்று வெளியிடப்பட்ட அரசின் செய்திக்குறிப்பில், கடந்த மூன்று வருடங்களாக தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பில் முதல் மூன்று இடங்களை தக்க வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தென்தமிழகத்தில் அனேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும்

என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 47 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

வீரமாமுனிவரின் 344வது பிறந்த தினத்தை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டியில் உள்ள அவரது உருவச் சிலைக்கு மாநில அமைச்சர் திருமதி. கீதாஜீவன் மற்றும் ஆட்சியர் திரு. இளபகவத் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

>>>>><<<<<

கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவு சங்கங்கள் மூலம், விவசாயிகள் பயிர் சாகுபடி செய்து பயன்பெறுவதற்கு ஏதுவாக, பயிர்க்கடன் மற்றும் உரங்கள் தங்கு தடையின்றி விநியோகிக்கப்படுவதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சேலம் கோட்ட புறநகர் வழித்தடத்திற்கு ஆறு புதிய பேருந்து சேவையை சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

மத்திய அரசின் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தில் தற்காப்புக் கலை பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் சான்றிதழ்களை வழங்கினார்.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் மனித உரிமை கவுன்சில் அதிகாரிகள் மற்றும் இலங்கை முகாம் தமிழர்கள் பிரதிநிதிகளுடன், அவர்களின் தேவைகள் மற்றும் சவால்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திரு. தர்பகராஜ் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மை விற்பனைக் கிடங்கில் இடுபொருட்களை வாங்க, விவசாயிகள் பணமில்லா பரிவர்த்தனை வசதியை

பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி. அருணா கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டத்தின் கீழ், நடைபாதை வியாபாரிகளுக்கான பதிவுக் கட்டணம் ரத்து செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் திரு. மாரியப்பன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டத்தில், குடும்ப அட்டையில் பெயர் நீக்கம் மற்றும் சேர்த்தல், புதிய அட்டை கோருதல் தொடர்பான பொதுவிநியோக திட்ட மக்கள் குறைதீர் நாள் முகாம், நாளை நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி. உமா தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஊட்டி, கொடைக்கானலுக்கு இ-பாஸ் பெற்ற வாகனங்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும் என நீலகிரி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் Anahat Singh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

காலிறுதியில் அவர் ஜப்பானின் Akari Midorikawa—வை 9-11, 11-14, 11-7, 11-7 என்ற செட்கணக்கில் தோற்கடித்தார்.

>>>>><<<<<

மெல்பேர்னில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா-ஏ அணி 5 விக்கெட் இழப்புக்கு 73 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, ஆஸ்திரேலியா-ஏ அணி முதல் இன்னிங்ஸில் 223 ரன்னுக்கும், இந்தியா-ஏ அணி 161 ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

>>>>><<<<<

அஸ்ஸாம் அணிக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று தமிழக அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 8 ரன் எடுத்துள்ளது.

குவாஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்ஸில் 338 ரன்னும், அஸ்ஸாம் அணி 445 ரன்னும் எடுத்தது.

>>>>>END<<<<<